பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 23 | திங்கட்கிழமை | 08.01.2024 | அதிர்வு 160

## நாளை கூடுகின்றது நாடாளுமன்ற அமர்வு

### முக்கிய சட்டமூலங்கள் மீது விவாதம்

நாடாளுமன்றம் நாளை 9 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை கூடவிருப்பதாக நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன

06



### தமிழ் எம்.பிக்களுக்குள் ஒற்றுமை இல்லை; ஆனால்

# எம்முடன் சேர்ந்து பயணிக்க தமிழ் மக்கள் தயார் நிலையில்

### வடக்கு விஜயத்தை நிறைவு செய்த ஜனாதிபதி ரணில் இப்படி தெரிவிப்பு

“தமிழ்க் கட்சிகளுக்கிடையில் நிலவும் முரண்பாடுகளால் தமிழ் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்குள்ஒற்றுமைஇல்லை.ஆனால்,தமிழ்மக்கள்எம்முடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளனர். வடக்கு விஜயத்தின்போது இதனை நான் புரிந்து கொண்டேன். எனவே, தமிழ் மக்களையும் அரவணைத்துக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

அதேவேளை, அரசின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இணைந்து பயணிக்குமாறு எதிரணியில் இருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுகின்றேன்.”

05

## 26 வயது காதலியைக் கத்தியால் குத்தி படுகொலை செய்த 24 வயது காதலன்!



தன் காதலியுடன் ஏற்பட்ட முரண்பாட்டில் காதலன் காதலியைக் கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் பிலியந்தலை பிரதேசத்தில் நேற்று இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் 24 வயதுடைய இளைஞர்,

05




யுத்தம் முடிந்த கையோடு தமிழர் தாயகப் பிரதேசங்களில் இலங்கை நீதிமன்றங்களின் செல்வாக்கும் நியாயாதிக்கமும் மீண்டும் ஓரளவு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது வாஸ்தவம் தான்.

அதனால் புது ‘தடை உத்தரவு கலாச்சாரம்’ ஒன்று இப்போது உருவாகி இருக்கின்றது.

தமிழர் தேசியத்தை பறைசாற்றும் நினைவேந்தல்கள், எழுச்சி

06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# தேசிய மக்கள் கட்சியின் உறுப்பினர்களை ஏற்றிச் சென்ற பஸ் மோதி இளைஞர் சாவு!




பஸ்ஸும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்களில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் எல்பிட்டிய, ஓமட்ட பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புஷ்பகே திலான் தனுஷ்க என்ற 31 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

எல்பிட்டியவில் இருந்து சென்ற தனியார் பஸ்ஸும், ஓமட்டவில் இருந்து எல்பிட்டி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று எல்பிட்டிய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

காலி நகரில் தேசிய மக்கள் சக்தி மகளிர் குழு கூட்டத்துக்கு கட்சி உறுப்பினர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸே மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் எல்பிட்டிய பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# பொருளாதாரப் போருக்கு முடிவு கட்டக்கூடிய வேட்பாளரையே களமிறக்கும் மொட்டுக் கட்சி

## ரோஹித எம்.பி. கூறுகின்றார்

இலங்கையின் பொருளாதாரப் போரை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய பொருத்தமான வேட்பாளரையே ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி களமிறக்கும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் சிலரின் பெயர்கள் உள்ளன. அவர்களில் பொருளாதாரப் போரை வெற்றிகொள்ளக்கூடிய வெற்றி வேட்பாளரையே களமிறக்குவோம். ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியும் பெறுவோம்.



ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் வேறு தேர்தல் நடந்தாலும் அதனையும் எதிர்கொள்வதற்குத் தயாராகவே இருக்கின்றோம்." - என்றார்.

# கிணற்றில் இருந்து மண்ணெண்ணெய் கசிவு



(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராமம் ஒன்றின் கிணற்றில் இருந்து மண்ணெண்ணெய் கசிவதால் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டு - குரவில் கிராமத்தில் உள்ள கிணற்றில் இருந்து நீருடன் மண்ணெண்ணெய் வெளியேறுவதை வீட்டார் அவதானித்துள்ளனர். இதனை அவர்கள் நேற்று கிராமசேவகரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

கிணற்று நீரை நீர் இறைக்கும் இயந்திரம் கொண்டு இறைத்தபோதே நீருடன் மண்ணெண்ணெய்யும் வெளியேறுவது கண்டறியப்பட்டதன் காரணமாகவே கிராமசேவகரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பில் கிராம சேவகர் உடனடியாகப் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கிய நிலையில், பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று கிணற்றைப் பார்வையிட்டதுடன் கிணற்றின் எண்ணெய் கலந்த நீரின் மாதிரியை எடுத்துச் சென்றனர்.

இதேநேரம் இந்தக் கிணறு அமைந்துள்ள காணிக்கு அருகில் விடுதலைப்புலிகளின் காலத்தில் விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்று காணப்பட்டது எனவும், அந்தக் காலத்தில் நிலத்தில் புதைக்கப்பட்ட மண்ணெண்ணெய் தற்போது நிலத்தடி நீரில் கசிகின்றதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

# பெயர் மாறினாலும் உங்கள் கொள்கை மாறவில்லையே!

## ஜே.வி.பியை விளாசித் தள்ளும் சஜித் கட்சி

"தமக்குப் பயங்கரவாத வரலாறு இருப்பதாலேயே ஜே.வி.பி. கட்சியானது அப்பெயரில் வராமல் புதியதொரு பெயரில் வந்துள்ளது. பெயர் மாறினாலும் ஜே.வி.பியினரின் கொள்கை இன்னும் மாறவில்லை."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர், மேலும் கூறியதாவது:-

"இந்த நாட்டில் பொருளாதாரத்துக்குப் பேரழிவை ஏற்படுத்தியவர்கள்தான் ஜே.வி.பியினர். எத்தனை தொழிற்சாலைகளை எரித்திருப்பார்கள்? எத்தனை ட்ரான்ஸ்போமர்களை கொளுத்தி இருப்பார்கள்? எத்தனை பஸ்களை எரித்திருப்பார்கள்? இந்நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களைத் திறக்க அவர்கள் அனுமதிக்கவில்லை. வெளிநாட்டு வருமானத்தை அவர்கள் தடுத்தனர்.

இவ்வாறு பொருளாதாரத்துக்குப் பேரழிவை ஏற்படுத்தியவர்கள்தான் ஜே.வி.பியினர். இன்று தமது பெயரை மாற்றிக்கொண்டு தேசிய மக்கள் சக்தியினர் என வெளியில் முகம் காட்டுகின்றனர். பெயரை மாற்றியதன் நோக்கம் என்ன?

ஊர்ப் பகுதிகளில் உள்ள ரௌடிகள் சிறைக்குச் சென்று மீண்டும் வரும்போது தமது பெயர்களை மாற்றிக்கொண்டே வருவார்கள். அதுபோலவே ஜே.வி.பி. இன்று என்.பி.பி.யாக வந்துள்ளது. தமது பயங்கரமான - பயங்கரவாத வரலாற்றால்தான் பெயர் மாற்றப்பட்டுள்ளது. ஆனால், ஜே.வி.பியினரின் கொள்கை மாறவில்லை. அடுத்த தேர்தலில் எமது கூட்டணியே வெற்றி பெறும். அதனால்தான் எம் மீது ஜே.வி.பியினர் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்." - என்றார்.



# யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரியோவில் ஐஸ் கிரீம் சுவைக்கவும் மறக்கவில்லை!

## வடக்கின் திறமைசாலிகளுக்கும் பாராட்டு


யாழ்ப்பாணம், ஜன. 08

யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ரியோ ஐஸ் கிரீம் விற்பனை நிலையத்துக்கு விஜயம் செய்து ஐஸ் கிரீம் சுவைக்கவும் மறக்கவில்லை.

அங்கு meet and greet என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்விலும் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

வடக்கு மாகாணத்தில் கல்வி, விளையாட்டு, நாடகம் மற்றும் திரைப்படக் கலை, சமூக ஊடகங்கள் போன்ற துறைகளில் திறமை செலுத்தியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

திறமைசாலிகளைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்த ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.











# திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இந்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய நாடாளுமன்ற விவகாரக் குழு இதனை தீர்மானித்திருந்தது.அதன்படி, எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 09.30 மணி முதல் 10.30 வரை வாய்வழி வினாவுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்போது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கச் சட்டமூலத்திற்கான அலுவலகம் ஸ்தாபிக்கும் திருத்தச்சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு, தேசிய நீரியல் திருத்தச்சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதங்கள் இடம்பெறவுள்ளன.



# கொக்கட்டிச்சோலையில் சனியன்று கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## உற்பத்தியாளர்கள் தப்பி ஓட்டம்; உபகரணங்கள் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை முனைக்காடு வாவிக்கரைப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையத்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸார் முற்றுகையிட்ட மையை அடுத்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர். பெருமளவிலான கோடா மற்றும் 9 பரல்கள் மற்றும் கசிப்பு உற்பத்தி உப கரணங்களை மீட்டு கொக்கட்டிச்சோலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் டி.எஸ்.எஸ். கே. தெலங்காவலகே தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல எதிரிமானவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் டி.எஸ்.எஸ்.கே. தெலங்காவலகே தலைமையிலான பொலஸ் குழுவினர் நேற்று முன்தினம் பகல் கொக்கட்டிச்சோலை முனைக்காடு வாவிக்கரைப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.



# ஏப்ரலுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பாராம்

## சஜித் அணி எம்.பி. நம்பிக்கை

"இவ்வருடம் ஏப்ரல் மாதத்துக்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுப்பார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பின் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:–

"ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றி எமக்கு நன்கு தெரியும். அவர் ஆய்வின் அடிப்படையில் அரசியல் நடத்துபவர். ஜனவரி இறுதி அல்லது பெப்ரவரி முற்பகுதியில் அவருக்குக் கிடைக்கப் பெறும் ஆய்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, நிச்சயம் நாடாளுமன்றத் தேர்தலே ஏப்ரல் மாதத்துக்குள் நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியைத் தவிர மாற்றுக் கூட்டணியொன்று இல்லை." – என்றார்.

# ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலாம்

## அதற்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறாது என ஐ.தே.க. கூறுகின்றது



"எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக எமது கட்சியின் தலைவரான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரான முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இம்மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்படவுள்ளது என்ற தகவலில் உண்மை இல்லை என்றும் அவர் கூறினார்.

முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படவுள்ளது என்றும், அதற்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



# காட்டு யானை தாக்கி இளைஞர் ஒருவர் பலி

காட்டு யானை தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை, வெலிக்கந்தை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி இளைஞர் நேற்றுமுன்தினம் இரவு அருகிலிருந்த காட்டுப் பகுதியில் மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது யானையின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார் என்று வெலிக்கந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிக்கந்தை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய வசந்த பண்டார என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# எம்முடன் சேர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"நாட்டின் சகல துறைகளிலும் அபிவிருத்தி ஏற்பட வேண்டும். இந்த அபிவிருத்தியில் தமிழ் மக்களின் பங்களிப்பு முக்கிய இடம் வகிக்க வேண்டும். இன, மத, மொழி வேறுபாடின்றி அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டால்தான் அரசியல் தீர்வுக்கான பயணமும் தடையின்றி தொடரும்" – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த வியாழக்கிழமை வடக்குக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று ஞாயிற்றுக்கிழமையுடன் தனது விஜயத்தை நிறைவு செய்துள்ளார். வடக்கு விஜயத்தின்போது அவர், அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். இந்நிலையில், வடக்கு விஜயம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# 26 வயது காதலியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொலைக்குப் பயன்படுத்திய கத்தியுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றி வந்த 26 வயதான ஜே.எம். ஆயிஷா லக்மினி என்ற யுவதியே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட யுவதி தனது தாய், தந்தை மற்றும் சகோதரருடன் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் பிலியந்தலை பிரதேசத்தில் உள்ள வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரான காதலனுடன் கொல்லப்பட்ட யுவதி சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் காதல் உறவில் இருந்த நிலையில், சுமார் மூன்று மாதங்களாகத் தனது காதலனைத் தவிர்த்து வந்துள்ளார் என்று சந்தேகநபரின் வாக்குமூலத்தில் தெரியவந்துள்ளது என்று பிலியந்தலை பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்வுகள் நடைபெற உத்தேசிக்கப்பட்டால் அவற்றில் தமிழ்ப் பிரமுகர்கள் பங்கேற்காமல் தடை உத்தரவுக் கோரிக்கைகளை பொலிஸ் நிலையங்கள் போட்டி போட்டுக் கொண்டு நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கும்.

அத்தகைய விண்ணப்பங்கள் தொடர்பில் இலங்கையில் சமச்சீரான ஒரு நீதி முறைமை இருக்காது. ஒரு நீதிமன்றம் தடை உத்தரவு கொடுக்கும். இன்னொன்று மறுக்கும். நாட்டில் சட்டம் ஒன்று என்று தான் பெயர். ஆனால் ஒரே விடயத்திற்கு ஒன்றுக்கொன்று முரணான தீர்ப்புக்களையும் உத்தரவுகளையும் ஒரே நிலை நீதிமன்றங்கள் ஒரே நாளிலோ, அடுத்தடுத்து வருகின்ற நாள்களிலோ வழங்கும். ஒரே விடயத்திற்கு இரண்டு இடங்களில், இரண்டு வித்தியாசமான உத்தரவுகள். பல சமயங்களில் அவை ஒன்றுக்கொன்று முரணாகவும் இருக்கும். இலங்கையின் நீதித்துறையின் ஒரு சீர்த்தன்மை சீத்துவம் அத்தகையது.

அதேபோல தென்னிலங்கைத் தலைவர்கள் – தமிழ்த் தேசியத்துக்கு விரோதிகள் என்று கருதப்படுவோர் – தமிழர் தாயகத்துக்கு வரும்போது அவர்களுக்கு எதிராகத் தமிழ் தேசியவாதிகள் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கும், எதிர்ப்பு நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கும் அவர்களின் பெயர் குறிப்பிட்டு தடை உத்தரவுக்குப் பொலிஸார் விண்ணப்பிப்பர். நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளை வழங்கும். அதிலும் கூட முரண்பாடான உத்தரவுகளை வெவ்வேறு நீதிமன்றங்கள் வழங்குவது கண்கூடு.

இத்தகைய இரண்டு வகைத் தடை உத்தரவுகளுக்கும் மாறாக, மூன்றாவது வகை தடை உத்தரவு ஒன்று ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஒரு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

நிகழ்ச்சியோ தமிழ்த் தேசியத்துக்கு உரமேற்றும் தமிழ் கலை, கலாச்சாரப் பெருவிழா என்கிறார்கள்.

ஆம், திருகோணமலையில் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் நடத்துகின்ற கலை, கலாசார, பொங்கல் விழாதான்.

அதற்கு எதிராகக் கறுப்புக் கொடிகாட்டி எதிர்ப்புப் போராட்டம் நடத்தக்கூடாது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பிக்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் திருகோணமலை தமிழ் சபை, இராவண சேனை, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகளுக்கு திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருக்கின்றது. திருகோணமலை தலைமையகப் பொலிஸாரின் விண்ணப்பத்தின் மீது இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

அப்படியானால் ஆளுநர் செந்தில் தொண்டமான் மாகாண சபையின் கணக்கில் பெரும் எடுப்பில் – அதிக செலவில் – நடத்தும் இந்த ஆரவாரத் திருவிழா தமிழ்த் தேசிய சக்திகளுக்கு விரோதமானதா? புரியவில்லை...!

## நாளை கூடுகின்றது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 முதல் மு.ப. 10.30 வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), தேசிய நீரளவை சட்டமூலம் (இரண்டாவது மதிப்பீடு), கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தின் கீழ் 2355/30ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதி, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் 2334/55ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதி என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர், இலங்கை பட்டய கப்பல் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், இலங்கை சித்த உளவியல்சார் உயர் கற்கைநெறிகள் திறந்த நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன இரண்டாவது மதிப்பீட்டுக்காகச் சமர்ப்பிக்கப் படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை (ஆளும் கட்சி) மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் புதன்கிழமை, மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக (4 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப. 10.00 மணி முதல் 10.30 மணி வரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக (5 கேள்விகள்) ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்பின்னர் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை நீதிமன்றம், நியாய சபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு தொடர்பில் கடந்த நவம்பர் 8 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தின் இரண்டாவது நாள் விவாதம் நடத்தப்படவுள்ளது. அன்றையதினம், மத்தியஸ்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை அங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்டமூலம், அற்றோனித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம், மத்தியஸ்த சபை (திருத்த) சட்டமூலம், மோசடிகளைத் தடுத்தல் (திருத்த) சட்டமூலம், நொத்தாரிசு (திருத்த) சட்டமூலம் ஆகியவை தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான இரண்டு கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை தனியார் உறுப்பினர் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சுதந்திரக் கட்சிக்குப் புத்துயிர்ப்பு

இலங்கையைக் கடந்த எழுபது ஆண்டுகளாக மாறி மாறி ஆட்சி செய்த பிரதான இரண்டு கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கடந்த சில வருடங்களாக கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக - உலக்கை தேய்ந்து உளிப்பிடியானமை போன்று - சுருங்கிப் போனமை தெரிந்த விடயம்தான்.

சந்தர்ப்ப வசமாக அக்கட்சிகள் இரண்டின் பெயரிலும் இன்று நாடாளுமன்றத்தில் உள்ள எம்.பிக்கள் தலா ஒவ்வொருவர் தான்.

கடந்த பொதுத் தேர்தலில் பெரும்பாலும் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிட்டுத் தோல்வி கண்ட ஐ.தே.கட்சிக்கு தேசியப்பட்டியல்மூலம்ஒரேயொருஎம்.பி. பதவி மட்டுமே கிடைத்தது. அதை வைத்துக் கொண்டு நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளையும், ராஜபக்ஷக்களுக்கு நேர்ந்த பெரும் அரசியல் பின்னடைவுகளையும் பயன்படுத்தி ஒருவாறு ஜனாதிபதியாகி விட்டார். கட்சித் தலைவர் ஜனாதிபதி பதவியை வைத்திருப்பதால் அதை மூலதனமாகக் கொண்டு இப்போதைய பின்னடைவு நிலையில் இருந்து கட்சியை மேலே ஏற்றி விடலாம் என அக்கட்சி வட்டாரங்கள் கனவு காணுகின்றன.

மறுபுறத்தில் சுதந்திரக் கட்சியின் நிலைமையும் அதுதான். அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன கூட கடந்த பொதுத் தேர்தலில் மொட்டுக் கட்சி வேட்பாளராகவே போட்டியிட வேண்டியவரானார். அக்கட்சியின் 14 பேர் மொட்டு கட்சியின் எம்.பிக்களாக தேர்வாகினாலும் கூட, அவர்களின் பலர் இப்போது சுதந்திரக் கட்சியிலோ, அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் செயல்படுபவர்களாவோ இல்லை. கட்சி சிதறிச் சின்னாபின்னமாகிக் கிடக்கின்றது.

சு.கவின் பெயரில் போட்டியிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவான அங்கஜன் இராமநாதன்மட்டுமேஇப்போதுகட்சியின் ஒரே ஓர் எம்.பி. அவரும் மைத்திரிபால சிறிசேனவின் கீழ் சு.க. உறுப்பினராகச் செயல்படுகின்றாரா என்பதும் கேள்விக்குரியதே.

இந்தச்சூழ்நிலையில்தான்சுதந்திரகட்சிக்கு விட்டமின் ஏற்றி, மீண்டும் உயிரூட்டும் முயற்சிகள் மும்முரமாக தொடங்கப் பட்டிருக்கின்றன என்று கொழும்பில் செய்திகள் வெளியாகி உள்ளன.

இதன் ஒரு கட்டமாக - சு.கவிற்கு மீண்டும் தெம்பூட்டும் முயற்சியாக - முன்னாள் ஜனாதிபதியும் கட்சியின் முன்னாள் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்க மீண்டும் கட்சியில் இணைந்து முழுமூச்சுடன் உழைக்க இணக்கம் தெரிவித்திருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

கட்சியின் மூத்த தலைவர்கள் கடந்த வாரம் அவரைச் சந்தித்த போது அவர் இதற்கு சம்மதம் தெரிவித்திருக்கின்றார். அதன் அடிப்படையில், இன்று கொழும்பு காலிமுகத்திடலில் கட்சி நடத்தும் பண்டாரநாயக்கா நினைவு தின நிகழ்வில் சந்திரிகாவும் இணைந்து கொள்வார் எனக் கூறப்படுகின்றது. சந்திரிகாவின் தந்தையார் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவே கட்சியின் ஸ்தாபகர்.அவரின் படுகொலைக்குப் பிறகு தாயார் சிறிமாவோதான் கட்சியைத் தலைமை வகித்து நடத்தியவர். அதன் பின்னர் 2006 வரை சந்திரிகா.

சந்திரிகாவின் குடும்ப உரிமை கட்சியில் கணிசமாக உண்டு. சந்திரிகாவை மீண்ட இணைத்துக் கொண்டு கட்சிக்கு புத்துயிர்ப்பூட்டும் திட்டத்திற்கு கட்சியின்தற்போதையதலைவர்மைத்திரிபால சிறிசேனாவும் இணக்கம் தெரிவித்திருக்கிறார் என்று கூறப்படுகின்றது. கட்சியின் தலைமைப் பொறுப்பை சந்திரிகாவுக்கு வழங்கவும் மைத்திரி இப்போது தயார் என்று செய்திகள் வெளியாகி உள்ளன. ஆனால் கட்சி யாப்பின் பிரகாரம் வலிமையான பதவி என்று கூறப்படும் கட்சித் தவிசாளர் பதவியை சந்திரிக்கா எதிர்பார்க்கின்றார் என்று கூறப்படுகிறது. கட்சியில் மத்திய குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தைக் கூட சந்திரிகாவுக்கு விட்டுக் கொடுப்பதற்குக் கட்சி தலைவர் மைத்திரிபால சிறிசேன தயார் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று குழுவும் மத்திய குழுவும் இன்று கட்சியின் தலைமையகத்தில் முக்கிய கூட்டங்களை நடத்தவிருக்கின்றன. அக்கூட்டங்களில் கட்சிக்குப் புத்துயிர்ப்பூட்டும் திட்டம் குறித்து முடிவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தென்னிலங்கையில் பல கட்சிகளின் வளர்ச்சி ஜனநாயக அரசியலுக்கு முக்கியமானதுதான்!

# பாலு மகேந்திராவைக் கௌரவிக்கும் வகையிலான 'வேல்ஸ் விருது விழா' ஜனவரி 20 மட்டக்களப்பில்!

(பழுவூரான்)

மட்டக்களப்பில் பிறந்து தொழில் நிமிர்த்தம் தென்னிந்தியா சென்று சினிமாத் துறையில் சாதனைகளை நிலைநாட்டிய சினிமா இயக்குநர் பாலு மகேந்திராவைக் கௌரவிக்கும் வகையிலான 'வேல்ஸ் விருது விழா' எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மட்டக்களப்பு தேவாநாயகம் கலையரங்கில் இடம் பெறவுள்ளதாக நடன இயக்குனர் எஸ். கிருஷ்ணா தெரிவித்தார்.

வேல் விருது விழா தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வூடகச் சந்திப்பு மட்டு.ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

அவர் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-



வேல்ஸ் டான்ஸ் ஸ்ரூடியோ கம்பனியால் ஜனவரி 20 ஆம் திகதி பாலு மகேந்திராவின் பிறந்த தினத்தை முன்னிட்டு இவ்விருதுக்காக இலங்கை முழுவதிலும் இருந்து 50 கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தமிழ் மக்களுக்கு மகுடம் சூட்டும் விழாவாக இது அமையவுள்ளது.

இவ்விருது விழாவில் கலைஞர்கள் பல்துறை சார்ந்து தேர்வாகியுள்ளனர். இவ்விருது விழா வருடா வருடம் எமது அமைப்பால் தொடர்ந்தேர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படும்.

இந்நிலையில் இது யாரிடமிருந்து எதுவித பணமும் பெறப்படாது. எமது அமைப்பால் முற்று முழுதாக இலவசமாகவே நடத்தப்படுகிறது.

எனவே இந்நிகழ்வில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் எனப் பலதரப்பட்டோரும் கலந்து கொண்டு விருது பெறும் கலைஞர்களை வாழ்த்த வருமாறு இத்தருணத்தில் அழைப்பு விடுக்கிறேன். - என்றார்.

### மகா ஓயா, பதியத்தலாவ பிரதேசங்களில் பயிரிடப்பட்டு

# அறுவடைக்குத் தயாராகி வருகின்ற சோள மரங்களில் நோய்த்தாக்கம்!

### கண்டறிய பேரதெனிய விவசாய திணைக்கள அதிகாரிகள் களத்தில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மகா ஓயா மற்றும் பதியத் தலாவ பிரதேசங்களில் பயிரிடப்பட்டு அறுவடைக்குத் தயாராக உள்ள நிலை யில் சோள மரங்களில் ஏற்பட் டுள்ள ஒருவகைநோய்த்தாக்கத்தினால்பயிர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது பெய்துவரும் பலத்த மழை யினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக சோளமரத்தின் நுனிப்பகுதியிலிருந்து கணுப்பகுதி வரை மஞ்சள் நிறமாக மாறி பயிர் அப்படியே வாடி வதங்குவது டன் சோளக்குலையும் அப்படியே கீழே விழ ஆரம்பிக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாக அம்பாறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் டீ.எம்.எஸ்பி.திஸாநாயக்கவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதற்கு அமைவாக பேரதெனிய விவசாய திணைக்கள அதிகாரிகள் நோய்த்தாக் கத்திற்குட்பட்ட சோளத் தாவரங்களைப் பார்வையிட்டு அவற்றின் மாதிரிகளை யும் பெற்றுக் கொண்டனர்.

இவ்விரு பிரதேச செயலகப்பிரிவு களிலும் சுமார் ஏழாயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சோளப்பயிர்களில் சுமார் 10-15 வீதமான பயிர்களுக்கு இந்நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதாக விவசாய திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.





# உடப்பு பாரிபாட்டில் மீன் வாடி தீக்கிரை!

(ரஸீன் ரஸ்மின்)

உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாரிபாடு கிராமத்தில் உள்ள மீன் வாடியில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் திடீரென ஏற்பட்ட தீயினால் வாடி முழுமையாகத் தீக்கரை யாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித் தார்.

சம்பவம் நடந்த போது, மீனவர்கள் தொழில் முடிந்து வீட்டுக்குச் சென்ற பின்னர் அந்த வாடியில் காவலாளி மட்டுமே இருந்துள்ளார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

மீன்வாடி திடீரென தீப்பற்றி எரிந் துள்ளது. அருகில் உள்ளவர்கள் உடன டியாக அங்கு வந்து தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும், தீயினால் மீன்வாடி முழு மையாக எரிந்து நாசமாகியுள்ள. அந்த வாடியில் இருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருள்கள் தீக்கரை யாகியுள்ளன எனவும் கூறப்படுகி றது.

இது தொடர்பான மேலதிக விசார னைகளை உடப்பு பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.









# இஞ்சியின் விலை பெரும் அதிகரிப்பு

இஞ்சியின் விலை பெரும் அளவு உயர்வடைந்துள்ளது.

இதன்படி, 01 கிலோ கிராம் இஞ்சியின் விலை 2000 ரூபாயாகவும், 01 கிலோ கிராம் உலர் இஞ்சியின் விலை 3000 ரூபாயைக் கடந்துள்ளதாவும் இஞ்சிச் செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் இஞ்சிக்கான கேள்வி அதிகரித்துள்ள நிலையில், இஞ்சியின் விலை பெரும் அளவு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



# கிழக்கில் வைத்தியசாலைகளில் கடமையாற்றிவரும் உதவி ஊழியர்கள் 11இல் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(கனகராசா சரவணன்)

கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் கடமை யாற்றும் உதவி ஊழியர்களின் அடிப் படை பிரச்சினை மற்றும் வைத்திய சாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு நிறுத் தப்பட்டுள்ள உணவை வழங்குதல் உள்ளிட்ட 9 கோரிக்கைகளை முன் வைத்து எதிர்வரும் 11 ஆம் திகதி வைத்தியசாலைகளுக்கு முன்னால் ஆர்பாட்டத்தில் ஈடுபடுவர் என ஒன்றி ணைந்த சுகாதார வேவைகள் சங்க மத்திய குழு உறுப்பினர் மாணிக்கராசா லோகராஜ் தெரிவித்தார்.

ஏறாவூர் புன்னக்குடா வீதியிலுள்ள ஒன்றிணைந்த சுகாதார ஊழியர் சங்க காரியாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் கடமை யாற்றும் உதவி ஊழியர்களுக்கு பணி புரியும் அனைத்து அரச சிறப்பு விடு முறை, வார இறுதி மற்றும் விடுமுறை நாள்களுக்கான கொடுப்பனவு, நோயா ளர்களுக்கும் அனைத்து ஊழியர்க ளுக்கும் இல்லாமல் ஆக்கப்பட்ட உணவை வழங்குதல், அட்டெண்டர் நியமனத்தை குறித்த தினத்திலே வழங்குத்ச்ல், நோயாளர்களை கொல் லாமல் மருந்துகள் மற்றும் உபகர




ணங்களின் பற்றாக்குறை உடனடியாக தீர்த்தல், முறையான ஆள்சேர்ப்பு செயல்முறையை அமைத்திடல், மேல திக நேரத்தை 150 மணித்தியாலங் களாக்குதல், மேலதிக நேரக் கொடுப் பனவை ரேட் முறையில் வழுங்குதல், மேற்பார்வையாளர்கள் உணவு மற்றும் உதவியாளர்கள் உள்ளிட்ட பதவி உயர் வுகளை விரைவுபடுத்துதல், சம்பள உயர்வு உடனடியாக வழங்குதல், வரிச்சுமையுடன் கூடிய பொருள்களின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் கொடுத்தல் போன்ற 9 கோரிக்கைகளை சம்பந்தபட்ட அதி காரிகளுக்கு தெரிவித்தோம்.

இருந்தபோதும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. எனவே இந்த 9 கோரிக்கை களை முன்வைத்து எதிர்வரும் 11 ஆம் திகதி பகல் 12 மணியளவில் வைத்திய சாலைகளுக்கு முன்னால் கவனவீர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபடவுள்ளோம். எதிர்வரும் 22 ஆம் திகதி சுகயீன விடு முறை தெரிவித்து திருகோணமலையில் கிழக்கு பிராந்திய பணிப்பாளர் காரியா லயத்துக்கு முன்னால் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட் டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றிவரும் உதவி ஊழியர்கள் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடு படபோகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# காலி சிறையின் செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை

காலி சிறைச்சாலையின் செயற்பாடு களை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடக பேச்சாளர் காமினி பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலி சிறைச்சாலையிலுள்ள கைதி களுக்கு இடையில் மூளைக்காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளதையடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மூளைக்காய்ச்சலுக்கான அறிகுறிகளுடன் மேலும் 8 கைதிகள் அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, காலி கராபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதி ஒருவர் கடந்த 03 ஆம் திகதி மூளைக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தார்.

உயிரிழந்த கைதி கடந்த வருடம் டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி கொள் ளைச் சம்பவம் தொடர்பில் சிறையில்




அடைக்கப்பட்டிருந்தார் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேற்படி கைதி காய்ச்சல் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டி ருந்தார்.

உயிரிழந்த கைதி கொட்டவகம பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடையவர் என சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், காலி சிறைச்சாலை யின் செயற்பாடுகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடக பேச்சாளர் காமினி பி திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.






# அரசியல் தீர்வுப் பிரச்சினையை விடுத்து பொருளாதாரம் பற்றியே ஆராய்கிறேன்

## யாழில் ஐ.தே.கவினர் மத்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ் மாவட்டஜக்கிய தேசிய கட்சி பிரதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார்விடுதியில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்திற்கு நான்கு நாள் விஜயமாக வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளர் முன்னாள் கல்வி ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் அழைப்பில ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்தக் கலந்துரையாடல் யாழ் நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயரக்கணக்கான ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசில்களையும் கோரிக்கைக் கடிதங்களையும் வழங்கி வைத்தனர்.

குறித்த கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க – தற்பொழுது நம் அனைவருக்கும் உள்ள மிகப்பெரிய சவால் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதுதான். அத்தோடு வடபகுதியில் உள்ள வளங்களைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

குறிப்பாக வடக்கில் நான் வருகை தரும் போதெல்லாம் பிரச்சினை என்ன என கேட்கும் போது காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, அரசியல் தீர்வு என ஒரு சில பிரச்சினைகளுடன் மாத்திரம் என்னிடம் அணுகுவார்கள். அதனை விடுத்து, நாம் முன்னோக்கி செல்வதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றி தான் நான் ஆராய்கின்றேன்.

குறிப்பாக விவசாயத் துறையை நவீன மயப்படுத்தி நவீன முறையிலான விவசாய முறைகளை விரிவு படுத்துவதன் மூலம் தன்னிறைவு பொருளாதாரம் ஒன்றை உருவாக்குவதே எமது நோக்கம். அத்தோடு வெளிநாடுகளில் எவ்வாறு மின்சாரத்தை இயற்கை வளத்த்சொ பயன்படுத்தி உற்பத்தி செய்கின்றார்கள் அல்லது விவசாய உற்பத்திகளை எவ்வாறு நவீன முறையில் மேற்கொள்கின்றார்கள் என்பன போன்றவற்றை நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம்.

எனவே எதிர் வரும் காலங்களில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு பொருளாதாரத்தை மேம்படுத்தல் அவசியமான ஒன்றாகும்

அதற்கு அனைத்து மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – எனவும் தெரிவித்தார்











# காரைதீவில் கப்டன் விஜயகாந்திற்கு நேற்று ஆத்மசாந்தி பிரார்த்தனை, நினைவேந்தல்!

(வி.ரி.சகாதேவராஜா)

மறைந்த பிரபல நடிகரும் தமிழ் உணர்வாளருமான புரட்சிக்கலைஞர் கப்டன் விஜயகாந்திற்கு காரைதீவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த் தனை சிறப்பாக நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவுக்கிளைத் தலைவரும் முன் னாள் தவிசாளருமான கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் தலைமையில், சமூக செயற்பாட்டாளர் வி.ரி.சகா தேவராஜாவின் நெறிப்படுத்தலில் காரைதீவு பொது நூலக மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது .

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரதம பிரமுகராகக் கலந்து கொண்டார்.

மேலும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்க ளான பா.அரியநேத்திரன், ஜி.சிறி நேசன், சி லோகேஸ்வரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மா. நடராஜா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக கப்டன் விஜயகாந்தின் திருவுருவ படத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மற்றும் முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் மலர் மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து ஏனைய பிரமுகர்கள் மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

பின்னர் இரண்டு நிமிடநேர மௌன அஞ்சலி நடத்தப்பட்டது.

தொடர்ச்சியாக பிரமுகர்கள் கப்டன் விஜயகாந்தின் வாழ்க்கை மற்றும் ஈழத்தேசிய போராட்டத்தில் பங்களிப்பு தொடர்பாக உரையாற்றினார்கள்.

தாயக மக்களின் கதாநாயகனும் ஈழ தேசத்தின் விடுதலைக்காக அளப் பெரிய சேவைகளை வழங்கிய கொடை வள்ளலுமான விஜயகாந்தினுடைய ஆத்மா சாந்தி பிரார்த்தனையில் அனை வரும் கலந்து கொண்டனர்.









# யாழ் நகரில் போதை மாத்திரைகளுடன் மருந்தக ஊழியர் உட்பட 2 பேர் கைது!

யாழ்ப்பாணத்தில் போதை மாத்திரைகளை (வலி நிவாரணி) விற்பனை செய்து வந்த கும்பலை இலக்காக வைத்து முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் பிரபல மருந்தகம் ஒன்றின் ஊழியர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


அத்துடன், மருந்தகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதும் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

"யாழ்ப்பாணம் மாநகர மத்தியில் வியாபார நோக்கத்துடன் 1,100 போதை மாத்திரைகளுடன் நடமாடிய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பிரபல மருந்தகத்தின் ஊழியர் என விசாரணையில் தெரியவந்தது.

அதனடிப்படையில் மருந்தகத்தில் முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் மேலும் இரண்டு பெட்டிகளில் சுமார் 250 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. இந்த மாத்திரைகள் வலி நிவாரணியாக அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் இருவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் மீதும் மருந்தகம் மீதும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்" – என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விசாந்தவின் கீழ் இயங்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தெ.மேனன் தலைமையிலான மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.




# டிஜிட்டல் முறையில் பிறப்புச் சான்றிதழ்கள்: புதிய வேலைத்திட்டம் விரைவில் நடைமுறை

நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பிறப்புச் சான்றிதழ்களை வழங்கும் வேலைத்திட்டத்தை டிஜிட்டல் மயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி திட்டம் களுத்துறை மாவட்டத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக் பிரியந்த தெரிவித்துள்ளார். உலகலாவிய ரீதியில் டிஜிட்டல் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




# மட்டு. சின்ன உப்போடை ஆற்றங்கரையில் கைவிடப்பட்ட நிலையில் 4 கிரனேட்டுகள்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சின்ன உப்போடை ஆற்றங்கரையில் கைவிடப்பட்டிருந்த ஜே.ஆர் ரகக் கைக்குண்டுகள் நான்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளன என மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸெ தெரிவித்தனர்.

இந்த ஆற்றங்கரை ஓரத்தில் இருந்த பிளாஸ்ரிக் போத்தல் ஒன்றை மீனவர்கள் எடுத்துத் திறந்த போது அதில் கைக்குண்டு ஒன்று இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து அந்த இடத்திற்குச் சென்ற பொலிஸார் கைவிடப்பட்டிருந்த கைக்குண்டை மீட்டதுடன் அந்த ஆற்றங்கரைப் பகுதியில் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட போது ஏற்கனவே மீடகப்பட்ட இடத்தில் இருந்து சுமார் 10 மீற்றர் தூரத்தில் கைவிடப்பட்டிருந்து இன்னொரு கைக்குண்டை மீட்டனர். தொடர்ந்து மேலும் இரண்டு கைக்குண்டுகள் என மொத்தம் நான்கு கைக்குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவ்வாறு மீடகப்பட்ட நான்கு கைக்குண்டுகளையும் நீதிமன்ற உத்தரவு பெற்று அழிப்பதற்கு நடவடிக்கை ஏடுக்கப்பட்டுவருவதுடன் விசேட அதிரடிப்படை கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் அழைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.





# உயர்தர பரீட்சை மத்திய நிலையங்களுக்கு மேலதிகமாக பொறுப்பதிகாரிகள் நியமனம்

அடையாளம் காணப்பட்ட உயர்தர பரீட்சை மத்திய நிலையங்களுக்கு மேலதிக பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை மோசடிகளை தடுக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதி பரீட்சைகள் ஆணையாளர் லசிக சமரகோன் தெரிவித்துள்ளார்.

உயர்தர பரீட்சை தொடர்பில் இதுவரையில் பரீட்சை முறைகேடுகள் எதுவும் பதிவாகவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக கல்கிரியாகம மற்றும் மனம்பிட்டியவில் அமைக்கப்பட்ட 2 விசேட பரீட்சை நிலையங்கள் தொடர்ந்தும் இயங்குகின்றன.

கல்கிரியாகம மத்திய மகா வித்தியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் 37 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

மனம்பிட்டிய சிங்கள மகா வித்தியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் 129 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என லசிக சமரகோன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு அறிவிப்பு விரைவில்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார நம்பிக்கை



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான தீர்மானத்தை இந்த மாத இறுதிக்குள் ஜனாதிபதி அறிவிப்பார் என தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் நுவரெலியா மாவட்டத்துக்கான மத்திய நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் உரையாற்றியபோது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் தொழிலாளர் அமைச்சரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பொன்றை வெளியிடுவாரென நான்நம்புகிறேன்என்று தெரிவித்துள்ளார்.

# ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடக்க வேண்டும்

## பவ்ரல் அமைப்பு வலியுறுத்தல்




எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு அரசியல் கட்சிகள் முன்வைக்கும் கொள்கை பிரகடனங்களுக்கு பொதுவான கட்டமைப்பை தயாரிப்பது குறித்து அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டிஆரச்சி இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் முதன்முறையாக வாக்களிக்கும் வாக்காளர்களை இலக்கு வைத்து தேர்தல்கள் ஆணைக் குழுவுடன் இணைந்து தற்போது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் ரோஹன ஹெட்டியாரச்சி குறிப்பிட்டுள்ளார்.

# சிறையிலுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகளையும் சுதந்திர தினத்திற்கு முன் விடுதலை செய்யுங்கள்!

## குரலற்றவர்களின் குரல் அமைப்புக் கோரிக்கை

குரலற்றவர்களின் குரல
හඬ නැත අයගේ හඬ
The Voice of the Voiceless

சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 12 தமிழ் அரசியல் கைதிகளையும் எதிர்வரும் சுதந்திர தினத்திற்கு முன்னதாக விடுதலை செய்ய வேண்டும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 4 நாள்கள் உத்தியோகப்பூர்வ விஜயமாக வடக்கிற்கு பயணித்துள்ள நிலையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி கையெழுத்துக்கள் அடங்கிய மனுவொன்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகனினால் கையளிக்கப்பட்டது. இனங்களுக்கிடையில் நீண்டகால மாக நிலவும் அரசியல் முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஜனாதி பதி உடனடி நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

# 5 நாள்களில் 1,085 பேரை பீழித்தது டெங்கு தொற்று!

கடந்த 5 நாள்களில் மாத்திரம் 1,085 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


கொழும்பு, கண்டி, கேகாலை, திருகோணமலை, இரத்தினபுரி, புத்தளம் கம்பஹா, களுத்துறை, காலி, பொலன்னறுவை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிகளவானோர் டெங்கு நோய் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, டெங்கு நோயை கட்டுப்படுத்தும் வகையில் நேற்று முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் மாத்திரம் 88 ஆயிரத்து 398 பேர் டெங்கு நோய் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், டெங்கு நோய் தொற்றினால் பாதிக்கப்பட்ட 58 பேர் உயிரிழந்துள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, பொலிஸார், முப்படையினர், சுகாதார அமைச்சு மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் தலைமையில்




இந்த வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

அத்துடன், சுகாதார அமைச்சு, பொலிஸ் மற்றும் இராணுவம் இணைந்து 24 மணித்தியால விசேட நடவடிக்கை நிலையமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இதற்கமைய, நுளம்புகள் பெருகும் இடங்கள் இருப்பின் அது குறித்து 011 7 966 366 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறு தேசிய டெங்கு தடுப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மழை நிலையுடனான காலநிலை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதால் டெங்கு பரவல் மேலும் அதிகரிக்கலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

அதேநேரம், இரண்டு நாள்களுக்கு காய்ச்சல் நீடிக்குமாயின் அருகிலுள்ள வைத்தியசாலையை நாடி சிகிச்சை பெறுமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# அன்றாட உணவுத் தேவைக்காக இலங்கையில் கடனாளிகளாகியுள்ள ஏழு லட்சம் குடும்பங்கள்!

நாட்டில் கடன்பட்டுள்ள குடும்பங்களில் ஏறக்குறைய 7 லட்சம் குடும்பங்கள் தமது அன்றாட உணவுத் தேவைக்காக கடன் பெற்றுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் தொகை மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் சமீபத்திய ஆய்வு அறிக்கையில் இது தெரிய வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொத்தக் கடனாளி குடும்பங்களில் உணவுக்காகக் கடன் பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 22.3 வீதமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் புனரமைப்பதற்கும் 53 ஆயிரத்து 200 குடும்பங்களும், வங்கிகளில் 97 ஆயிரம் குடும்பங்களும், நிதி நிறுவனங்களில் 2 லட்சத்து 72 ஆயிரத்து 250 குடும்பங்களும், பண தரகர்களிடம் 3 லட்சத்து 35 ஆயிரம் குடும்பங்களும் கடன் பெற்றுள்ளன எனவும் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை புத்தாண்டில் மேலும் அதிகரிப்பு!

புத்தாண்டின் முதல் வாரத்தின் இலங்கைக்கு வருகைத்தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 25 ஆயிரத்தை கடந்துள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் 4ஆம் திகதி வரையில் 25 ஆயிரத்து 619 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைத்தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் ரஷ்ய சுற்றுலாப் பயணிகள். மீதமுள்ளவர்கள் இந்தியா, ஜேர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியுடனான சந்திப்புகளின்போது கடற்றொழிலாளர் சமாசங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன!

## ஊர்காவற்றுறை சமாச செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா குற்றச்சாட்டு

"வடக்கு மாகாணத்திற்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில் கடற்றொழிலாளர் சமாசங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஒரு கட்சி சார்பில் அழைக்கப்பட்டவர்களுடன் மாத்திரம் ஜனாதிபதி சந்திப்பை மேற்கொண்டுள்ளார்."

– இவ்வாறு ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூ.சங்கங்களின் சமாச செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"வடக்கிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிறு தொழில் முயற்சியாளர்கள், கூட்டுறவாளர்கள் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள், இவர்களோடு கடற்றொழிலாளர்களையும் இணைத்து நேற்று முன்தினம் மதியம் 12 மணிக்கு யாழ் மாவட்ட செயலகத்தில் சந்திப்பு இடம்பெற்றிருந்து.

வடக்கு மாகாணத்தில் உள்ள பல கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களை புறக்கணித்து குறிப்பாக முல்லைத்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை சமாசங்கள் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண கடற்றொழில் சமூகத்துடனான சந்திப்பில் இந்த மூன்று சமாசங்கள் புறக்கணிக்கப்பட்டமை ஏன் என்ற கேள்வி எழுகிறது.

ஜனாதிபதியின் வருகையை அறிந்து ஊர்காவற்றுறை சமாசத்திற்குட்பட்ட கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் குறித்து ஜனாதிபியிடம் தெரிவிப்பதற்கு அனுமதி பெற்ற தருமாறு கோரி யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலருக்கும் கடந்த முதலாம் திகதி கடிதம் மூலம் கோரியிருந்த நிலையில் அதற்கான பதிலும் கிடைக்கவில்லை. சந்திக்க அனுமதிக்கவும் இல்லை.

இதன்மூலம் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடற்றொழிலாளர் விடயத்தில் ஜனநாயகம் இருக்கின்றதா என்ற கேள்வி எழுகிறது. யாழ். மாவட்டத்தில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் முதன்மையாக இருக்கின்ற நிலையில் வடக்கிற்கு வந்த ஜனாதிபதி ஒரு கட்சி சார்பில் அழைக்கப்பட்டவர்களுடன் மாத்திரம் சந்திப்பை மேற்கொண்டதன் மூலம் அவர் ஒரு கட்சிக்கான ஜனாதிபதியா, இல்லை கட்சி சார்பானவர்களுக்கான ஜனாதிபதியா என்ற கேள்வியையும் எழுப்புகின்றோம்.

ஒரு கட்சி சார்பானவர்களுக்கும் அவர்களுடைய விசுவாசிகளுக்கும் மட்டும் சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.என்றால் கடற்றொழில் திணைக்களம், பிரதேச செயலகம், மாவட்ட செயலகம் எதற்கு? இவ்வாறான சிவில் நிர்வாக கட்டமைப்புகளை ஒரு கட்சியின் பிடிக்குள் கொடுத்துவிட்டு ஒரு கட்சிக்கு ஜனாதிபதியாக அந்த சந்திப்புகளை மேற்கொண்டிருக்கலாம். நாங்கள் அந்நிய நாட்டவர்களாக? நாங்களும் இந்த நாட்டின் குடிமக்கள்தானே?

வடக்கு கடற்றொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பில் உண்மைகளை ஜனாதிபதியுடனான சந்திப்பில் தெரிவித்துவிடுவோம் என்ற அச்சம் காரணமாகவே உண்மைகளை பேசுகின்ற எங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இது ஜனநாயகத்திற்கு விரோதமான செயற்பாடு.

இதுவரை காலமும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் கடற்றொழில் அமைச்சராக இருந்த போதெல்லாம் வடக்கில் உள்ள மீனவர்களது பிரச்சினைகளையும் உண்மை நிலைமைகளையும் தெளிவாக வெளிகொண்டு வருவதற்கு சந்தரப்பங்களை உருவாக்கியிருந்தார்கள். ஆனால் ஒரு தமிழர் கடற்றொழில் அமைச்சராக இருந்து கொண்டு கடற்றொழிலாளர்களை பிளவுபடுத்தி அரசியல் உள்நோக்கத்துடன் வழிநடத்துவது வடக்கு கடற்றொழில் சமூகத்தினராகிய எமக்கு மிகுந்த வேதனையையும் கவலையினையும் ஏற்படுத்தியுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் கடற்றொழிலாளர்களையும் அவர்கள் சார்ந்த அமைப்புகளையும் பிளவுபடுத்தி தனது கட்சியினர் மற்றும் ஆதரவாளர்களை வைத்துக்கொண்டு மீனவர்கள் என்ற போர்வையில் மீனவர் பிரச்சினை தொடர்பில் இந்தியாவுக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தப்போகிறார் என அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவர்களுடன் செல்வதாக நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் ராமநாதன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் அறிவித்துள்ளனர். இவ்வாறு இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு கடற்றொழில் அமைச்சரின் கட்சி ஆதரவாளர்களுடன் சென்று அந்த கட்சியை வளர்க்கப் போகின்றீர்களா? அமைச்சரின் இந்த செயற்பாடுகளுக்கு துணைபோக வேண்டாம். மக்களிடம் சென்று கேளுங்கள் எது உண்மை என்பது தெரியவரும். கடற்றொழில் அமைச்சரின் கருத்தை நம்பி செயற்படுவீர்களானால் கடற்றொழில் மக்களுக்கு துரோகம் இழைத்தவர்களாகவே கருதப்படும்.

வடக்கு கடற்றொழிலாளர்களது பிரச்சினை கட்சி மயமாக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கடற்றொழிலாளர்களது பிரச்சினையை ஒரு கட்சிக்குரியதாக்கி அந்த கட்சி சார்பானவர்களுடன் மட்டுப்படுத்தி முன்னெடுக்கப்படும் என்றால் அது எதிர்காலத்தில் இன்னும் வீரியமடையும். அந்த கட்சி எங்களை சுட்டுக்கொன்றாலும் பரவாயில்லை கடற்றொழிலாளர்களது பிரச்சினைகளை தொடர்ந்து நாங்கள் வெளிக்கொண்டு வருவோம்." – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.01.2024




இன்று நீங்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது சிறந்தது. அதன் மூலம் இன்றைய நாள் சீராகச் செல்லும்.

இன்று பணியில் முன்னேற்றகரமான நிலை இருக்காது. உங்கள் பணிகளை கவனச் சிதறலின்றி கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையை இன்று புரிந்துகொள்வது கடினமாக இருக்கும். வாக்குவாதமும் கருத்து வேறுபாடும் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று வீணான செலவுகள் செய்ய நேரும். தேவையற்ற செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று பதட்ட நிலை உங்களை பாதிக்கும். அமைதியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று உங்களிடம் நம்பிக்கை காணப்படும்.

இன்று நீங்கள் அறிவுப்பூர்வமாக திட்டமிட்டு உறுதியாக பணியாற்றினால் கடினமான பணிகளையும் இன்று எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடனான உறவில் அன்பு பெருகும். இது இருவருக்குமிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட உதவும்.

பங்கு வர்த்தகம் மூலம் கூடுதல் பண வரவு காணப்படும். இன்றைய நாளை நீங்கள் அதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

பொதுவாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். அதன் மூலம் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அமைதியான மன நிலை காணப்படும். உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்துகொள்ள முடியும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் பணிகள் சுமூகமாக நடைபெறும் உங்கள் தனித்த திறமை மூலமாக உங்களுள் ஒளிந்திருக்கும் ஆற்றல் வெளிப்படும்.

உங்கள் துணை உங்களிடம் அன்பான, நட்பான அணுகுமுறை மேற்கொள்வார். இதனால் நல்ல புரிந்துணர்வை உங்களால் பராமரிக்க முடியும்.

பணியிடத்தில் உங்கள் கடின உழைப்பு காரணமாக கூடுதல் ஊக்கத்தொகை மூலம் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும். உங்கள் மனதில் காணப்படும் நம்பிக்கை உணர்வு காரணமாக இன்று நீங்கள் நல்ல உடல் நிலையை பராமரிப்பீர்கள்.




இன்று பல தடைகளை சந்திக்க நேரும். குழப்பமான மன நிலை காரணமாக பதட்டம் காணப்படும். பொதுவாக இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். கடினமான நாள்.

இன்று நீங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது அசௌகரியமாக உணர்வீர்கள். அதிகரிக்கும் பணிகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவதை தவிர்க்கவும். அகந்தைப் போக்கு உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதி விஷயத்தில் இன்று சில கஷ்டங்களை சந்திக்க நேரும். அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தையும் கவலையையும் அளிக்கும்.

இன்று உங்களுக்கு தோள்களில் வலி ஏற்படலாம். சளி மற்றும் இருமல் பிரச்சினைக்கான வாய்ப்பு உள்ளது.




உங்கள் இலக்குகளை அடைவதில் சில தடைகளை சந்திக்க நேரும். அதிகமாக சிந்திக்காதீர்கள். உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் பொழுது அசௌகரியமாக உணர்வீர்கள். கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். எனவே குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க திட்டமிட்டு ஒழுங்கமைத்து பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் மோதல்கள் காணப்படும். மாறுபடும் சூழல்களை ஏற்றுக் கொண்டு அமைதியாகச் செயற்பட வேண்டும்.

உங்களின் சம்பாத்தியம் மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகு வலி பாதிப்பு காணப்படும். உடற்பயிற்சி மற்றும் தியானம் மிகவும் உதவிகரமாக இருக்கும்.




இன்று அமைதியான நாள். வசதிகள் பெருகும் நாள். உங்களிடம் திருப்தியான மனநிலை காணப்படும். நீங்கள் பெரிதாக சாதித்தது போன்று உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்வீர்கள். உங்கள் பணி செய்யும் முறை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் இருப்பதை சொர்கத்தில் இருப்பது போல உணர்வீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று சேமிப்பை ஏற்படுத்திக் கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். நிதிநிலைமை சுதந்திரமாக இருக்கும்.

உங்கள் மனதில் நம்பிக்கை தரும் எண்ணங்களும் மகிழ்ச்சியும் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று பதட்டம் காணப்படும். அமைதியாக இருப்பதன் மூலம் நல்ல முடிவுகளை எடுக்கலாம். பிரார்த்தனை மற்றும் வழிபாடு உதவிகரமாக இருக்கும்.

இன்று பணியில் பல சவால்களை சந்திக்க நேரும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு அதன்படி மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கலாம்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் பொறுப்புகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

பதட்டம் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை உங்களுக்கு ஆறுதல் தரும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். இன்று மகிழ்சிகரமான விஷயங்களையும் எதிர்பார்க்காதீர்கள். இன்று அதிகம் எதிர்பார்க்காதீர்கள்.

பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். பணிகளை திட்டமிட்டு அதன்படி மேற்கொள்ள வேண்டும்.

உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிக்கப்படும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். உங்கள் வீட்டு பெரியவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும். தேவையற்ற உணர்வுகள் காரணமாக ஆரோக்கியம் குறையும். இதன் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.01.2024




இன்று சுமாரான பலன்களே கிடைக்கும்.இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவு அதிகமாக இருக்கும். உங்கள் மனதில் குழப்பம் காணப்படும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். முறையாக திட்டமிட்டால் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் முடிக்க இயலும்.

உங்கள் துணையுடன் உரையாடும் போது சகஜமாக இருக்க வேண்டும். இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதிநிலைமையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். அதற்கேற்றபடி திட்டமிடுங்கள்.

மிகவும் வருத்திக் கொள்வதன் மூலம் கண்களில் எரிச்சல் ஏற்படலாம். எனவே இதனை தவிர்க்க உற்சாகத்துடன் இருப்பது சிறந்தது.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். நீங்கள் இன்று விரைந்து முடிவெடுக்கக் கூடிய நல்ல மனநிலையில் இருப்பீர்கள். இன்று மொத்தத்தில் சிறப்பான நாள்.

நீங்கள் பணிகளை விரைவாக மேற்கொள்வீர்கள்.நம்பிக்கை மற்றும் உறுதி கொண்டு உங்கள் போராட்டங்களை சமாளிக்கலாம். இதன் மூலம் நீங்கள் வெற்றி காணலாம்.

உங்கள் துணையிடம் பொறுமையான அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் அவர் உங்களை நன்கு புரிந்து கொள்வார். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம். உங்கள் நிதிநிலையை சிறப்பாக மேம்படுத்திக் கொள்வீர்கள்.




இன்று மிகவும் அனுகூலமான நாள். நம்பிக்கை உணர்வு அதிகரிக்கும். செழிப்பான நாள். இன்று அமைதியாக உணர்வீர்கள்.

பணியிடத்தில் உற்சாகமூட்டும் வாய்ப்புகள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நீங்கள் நகைச்சுவை உணர்வோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கான ஊக்கத் தொகை மூலம் அந்தப் பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் நம்பிக்கை காரணமாக நீங்கள் மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று சற்று மந்த நிலை காணப்படும். உங்கள் செயல்களை ஆற்றும் போது கவனம் தேவை. உறுதி மற்றும் சிறப்பான திட்டம் மூலம் நீங்கள் இன்று வெற்றி பெறலாம்.

பணியிடத்தில் வெற்றி அவ்வளவு எளிதாக கிடைக்காது. அதிகமான பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேரும்.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். இது உறவின் மகிழ்ச்சி நிலையைக் குறைக்கும்.

அதிகரிக்கும் குடும்பப் பொறுப்புகள் காரணமாக அதிக பணம் செலவாகும். இதனால் உங்கள் நிதிநிலை பாதிப்புக்குள்ளாகும்.

ஒவ்வாமை காரணமாக இன்று கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.






# விஜயகாந்துக்கு மதுரையில் அஞ்சலி நிகழ்வு: அனைத்துக் கட்சியினர் அமைதிப் பேரணி



தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் மறைவையொட்டி மது ரையில் நேற்று இடம்பெற்ற அமைதிப் பேரணியில் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்றனர்.

தே.மு.தி.க. நிறுவனத் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான நடிகர் விஜயகாந்த் கடந்த 28 ஆம் திகதி உடல் நலக்குறைவால் காலமானார். அவரது மறைவையொட்டி நேற்று மதுரை தே.மு.தி.க. ஒருங்கிணைந்த மாவட்டம் சார்பில் அமைதிப் பேரணி நடைபெற்றது.

மதுரை பெரியார் பஸ் நிலையம் அருகே யூ.சி. பாடசாலையிலிருந்து மேலமாசி வீதி வடக்கு மாசி வீதி வரை அமைதிப் பேரணியாக சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த விஜயகாந்த் உருவப் படத்துக்கு அனைத்து கட்சியினரும் மலரஞ்சலி செலுத்தினர்.

இதில் தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ், அ.ம.மு.க, வி.சி.க, தென்னிந்திய ஃ பார்வர்டு பிளாக் , கொம்யூனிஸ்ட் கட்சி, மருது சேனை அமைப்பு, வணிகர்கர்கள் சங்கம் மற்றும் அனைத்து கட்சிகளும் இணைந்து கொண்டு 1000 இற்கும் மேற்பட்டோர் பேரணியாக சென்றனர்.

இந்த பேரணிக்கு தே.மு.தி.க. மாநகர தெற்கு மாவட்டச் செயலாளர் மணிகண்டன், மாநகர் வடக்கு மாவட்டச் செயலாளர் பாலச்சந்திரன், புறநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் கணபதி ஆகியோர் தலைமை வகித்தனர்.

இந்த பேரணியில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஆர்பி.உதயகுமார் எம்.எல்.ஏ, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், துணை மேயர் தி.நாகராஜ், தே.மு.தி.க. உயர்மட்டக்குழு உறுப்பினர் பாலன், விசாரணைக்குழு உறுப்பினர் அழகர்சாமி, தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சி தலைவர் திருமாறன், மருது சேனை தலைவர் ஆதிநாராயணன், ஓ.பி.எஸ். அணி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் உள்பட அனைத்துக்கட்சியினர் பங்கேற்றனர்.

# பா.ஜ.கவுடன் இனி கூட்டணி கிடையாது: அ.தி.மு.க. பொதுச்செயலர் பழனிசாமி உறுதி

பா.ஜ.கவுடன் இனி கூட்டணி கிடையாது என அ.தி.மு.க. பொதுச்செயலர் பழனி சாமி தெரிவித்துள்ளார்.

மதுரை – பாண்டிகோயில் அருகிலுள்ள திடலில் எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில மாநாடு நேற்று இடம்பெற்றது. இந்த மாநாட்டிற்கு சிறப்பு அழைப்பாளராக தமிழக எதிர்க்கட்சி தலைவர், அ.தி.மு.க. பொதுச்செயலர் பழனிசாமி பங்கேற்றார்.

இதன்போது அவர் உரையாற்று கையில்,

“தி.மு.க. ஒரு பச்சோந்தி கட்சி. தி.மு.கவுக்கு அதிகாரம் மட்டுமே முக்கியம். கருணாநிதி, ஸ்டாலின் தொடர்ந்து உதயநிதி ஸ்டாலினும் முதல்வராக வர துடிக்கிறார். சிறந்த ஆட்சியால் மட்டுமே மக்களுக்கு அனைத்தும் கிடைக்கும். இந்த ஊரைச் சேர்ந்தவர், மெத்த படித்தவருமான முன்னாள் நிதி அமைச்சர், உதயநிதியும், சபரீசனும் 30




ஆயிரம் கோடி ரூபா வைத்துக்கொண்டு தடுமாறுகின்றனர் என குறிப்பிட்டார்.

இந்த பணத்தை சிறுபான்மை மக்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தி இருந்தால் பாராட்டி இருப்பர். கொள்ளை மட்டுமே தி.மு.க. குறிக்கோள். மத்தியில் ஆட்சிக்கு வரவேண்டும் எனில் யாருடனும் கூட்டணி வைப்பார்கள். கூட்டணி வேறு, கொள்கை வேறு. நாங்கள் என்றைக்கும் சரியாக இருக்கிறோம். கொள்கைக்கு தான் முன்னுரிமை.

பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை என அறிவித்த பிறகும் மறைமுகமாக கூட்டணி வைத்திருப்பதாக ஸ்டாலின் பேசுகிறார். சிறுபான்மை மக்களின் வாக்குகளை பெற முடியாமல் போகுமோ என முதல்வர் ஸ்டாலினுக்கு காய்ச்சல் வந்துள்ளது.

அடுத்த தேர்தலிலும் பா.ஜ.கவுடன் கூட்டணி இல்லை. எஸ்.டி.பி.ஐ. கட்சிக்கு அ.தி.மு.க அடித்தளம் அமைக்கும் என்பது உண்மை. சிறுபான்மை மக்க ளின் ஆதரவால் 40 தொகுதிகளை வெல்வோம். தமிழகத்துக்கான புதிய திட்டங்களுக்கு மக்களவையில் குரல் கொடுப்போம். சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படும்போது, ஒன்றாக சேர்ந்து குரல் கொடுப்போம். வெற்றி பெறுவோம். கண் இமை பாதுகாப்பது போன்று உங்களை அ.தி.மு.க. பாதுகாப்போம்.” – என்றார்.

## கூட்டணி பற்றி உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்: ஜி.கே.வாசன் கருத்து

நாடாளுமன்ற தேர்தல் த.மா.காவுக்கு மிக முக்கியமானது என்றும் கூட்டணி குறித்து உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் எனவும் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

த.மா.கா. மாணவர் அணியின் 10 ஆவது மாநில செயற்குழு கூட்டம் சென்னை தி.நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற தேர்தலில் த.மா. காவுக்கும், கூட்டணி கட்சிகளுக்கும் பலம் சேர்க்கும் வகையில் களத்தில் வலுவாக பணியாற்ற தொடர் கூட்டங்களை நடத்தி வருகிறேன். 2024 நாடாளுமன்ற தேர்தல் த.மா.காவுக்கு மிக முக்கியமான தேர்தல் ஆகும். இந்த தேர்தலில் தமாகாவின் குரல் நாடாளுமன்ற மக்களவையில் ஒலிக்க வேண்டும் என்ற ரீதியில் செயல்பட்டு கொண்டிருக்கிறோம்.

யாருடன் கூட்டணி, எத்தனை, தொகுதியில் நிற்கிறோம், என்பது குறித்து இன்னும் முடிவுசெய்யப்படவில்லை. கூட்டணிகுறித்து உரிய நேரத்தில் அதி காரப்பூர்வமாக அறிவிக்கப்படும். த.மா. கா. பலமான கட்சியாக தேர்தல்களத்தில் குதிக்க வேண்டியது அவசியம்.” – என்றார்.

# மியான்மரில் தீவிரமடையும் உள்நாட்டு போர்: முக்கிய நகரை கைப்பற்றியது ஆயுதக்குழு



மியான்மரில், ஆங் சான் சூச்சி தலைமையிலான அரசை கவிழ்த்து, 2021 இல் இராணுவம் ஆட்சியை கைப்பற்றியது.

இதைத் தொடர்ந்து, இராணுவ ஆட்சிக்கு எதிராக நாட்டிலுள்ள பழங்குடியின குழுக்கள் தீவிர போராட் டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், மியான்மரில் அரசு படைகளுக்கு எதிராக களமிறங்கியுள்ள பழங்குடியின ஆயுதக் குழு, வடகிழக்கே சீனாவுடனான எல்லையில் உள்ள முக்கிய நகரை கைப்பற்றி உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மூன்று முக்கிய அமைப்புகள் அடங்கிய இந்த ஆயுதம் ஏந்திய குழு, இராணுவத்துக்கு எதிராக தொடர்ந்து போரிட்டு வருகிறது.

பல முக்கிய நகரங்களை இந்த ஆயுதக் குழு கைப்பற்றி வருகிறது. இந்த நிலையில், நாட்டின் வடகிழக்கே, சீனாவை ஒட்டியுள்ள லாக்காயிங் என்ற முக்கிய நகரை, ஆயுதக் குழு நேற்று கைப்பற்றியுள்ளது.

கடந்த பல வாரங்களாக கடுமையான யுத்தம் இடம்பெற்ற நிலையில், இராணுவம் ஆயுதங்களை கைவிட்டு சரணடைந்தது.

மியான்மர் இராணுவத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ள சீனா, அதே நேரத்தில் இந்த ஆயுதக் குழுவுக்கும் ஆதரவு தெரிவித்துள்ளது.

இந்த ஆயுதக் குழுவில் இடம்பெற்ற மியான்மர் தேசிய ஜனநாயக கூட்டணி படையில், சீன பழங்குடியினர் அதிகம் உள்ளனர். போரை நிறுத்தி, அமைதி பேச்சு நடத்தும்படி சீனா தொடர்ந்து கூறி வருகிறது.

இந்த நிலையில், அதன் எல்லையை அண்மித்துள்ள லாக்காயிங் பகுதியை, பழங்குடியின ஆயுதப் படை முழுமையாக கைப்பற்றியுள்ளது.

# இஸ்ரேலின் இராணுவ தளம் மீது ஹிஸ்புல்லா ஏவுகணை தாக்குதல்





இஸ்ரேலின் மெரோன் வான் கட்டுப்பாட்டு தளத்தை ஹிஸ்புல்லா இயக்கம் ஏவுகணைகளால் தாக்கியுள் ளதாக தகவல் வெளியாகியுள் ளது.

ஹமாஸ் அமைப்பின் துணை தலைவர் கொல்லப்பட்டதற்கு முதற்கட்ட பதிலடி இதுவாகும் என்றும் 62 வகை ஏவுகணைகளை வீசி மெரோன் விமான கட்டுப்பாட்டு தளம் தாக்கப்பட்டது என வும் ஹிஸ்புல்லா இயக்கம் தெரிவித் துள்ளது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் புறநகர் பகுதியில் இஸ்ரேல் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் துணை தலைவர் ஷேக்சலே அல அரூரி கொல்லப்பட்டார்.

இதற்கு பதிலடி கொடுக்கப்படும் என்று லெபனானில் செயல்படும் ஹிஸ்புல்லா இயக்கம் தெரிவித்திருந்தது.

அதன்படி இஸ்ரேலின் மெரோன் விமான கட்டுப்பாட்டு தளம் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலால் ஓடு பாதை சேதம் அடைந்துள்ளதாகவும், மேற்படி இராணுவ தளத்தில் இருந்து இஸ்ரேலிய விமானப்படையால் போர் விமானங்கள் இயக்க முடியவில்லை என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

இதேவேளை, இதற்கு பதிலடியாக லெபனானில் இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளன.